புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2054 | மே 25, 2023 | புரட்சி 22 | முழக்கம் 19 | விலை: ரூ.3.00

# சேலம் மாவட்ட கழகத்திற்குப் பாராட்டு

# திராவிடம் – சனாதனத்தை விளக்கும் 1000 தெருமுனைக் கூட்டங்கள்: சேலத்தில் கூடிய கழக செயலவை முடிவுகள்

# ஜூன் 1 முதல் 30 வரை தீண்டாமையைப் பின்பற்றும் கிராமங்களின் பட்டியல் தயாரிப்பு




*சேலத்தில் கடந்த மே 21ஆம் தேதி சேலம் குகை ஜி.பி.கூடத்தில் நடந்த கழகச் செயலவைக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி முன்மொழிந்த தீர்மானங்கள்.*

**சேலம் மாவட்டக் கழகத்திற்குப் பாராட்டு :** திராவிடர் விடுதலைக் கழகம் ஏப்ரல் 29, 30 தேதிகளில் சேலத்தில் நடத்தி முடித்த மாநில மாநாடு மாபெரும் வெற்றியை ஈட்டி தந்துள்ளது. தேர்தல் அரசியல் சார்பற்ற பெரியார் இயக்கத்தில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், பெண்களும் ஆண்களும் இலட்சிய உறுதியோடு திரண்டு நின்ற காட்சி, கழகத்தை பலராலும் திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. இந்த மாநாடு. பெரியாரியத்தை அடுத்த தலைமுறை வீரியத்தோடு எடுத்துச் செல்லும் என்ற நம்பிக்கையை உறுதியாக்கி யிருப்பதோடு எதிரிகளுக்கு கடுமையான எச்சரிக்கையையும் விடுத்திருக்கிறது. இந்த பெரும்பணியை ஆர்வத்தோடு சுமப்பதற்கு முன்வந்து ஒரு மாத காலத்திற்கு மேலாக அயராது உழைத்த சேலம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களுக்கு இந்த செயலவை பாராட்டையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு முழுவதும் கழகத் தோழர்கள் சுவர் எழுத்துக்களை எழுதி, மக்களை சந்தித்து, நிதி திரட்டி, மாநாட்டு விளம்பரங்களை செய்து ஆர்வத்துடன் மாநாட்டுக்கு திரண்டு வந்து மாநாட்டின் வெற்றிக்கு பெரும் பங்காற்றி இருக்கிறார்கள். மாநாட்டின் பேரணி எழுச்சியும், கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட ஆழமான சிந்தனைகளும், மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உரையும், வெளியிடப்பட்ட குறும்படங்களும் மாநாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளன. இந்த எழுச்சியைத் தொடர்ந்து முன்னெடுக்கவும், ஏராளமான இளைஞர்களை இயக்கத்திற்கு கொண்டு வந்து சேர்க்கவும் உறுதியளித்து தோழர்கள் களம் காண முன்வர வேண்டும் என்று இந்த செயலவை கேட்டுக்கொள்கிறது.

**வி.பி.சிங் சிலை: முதல்வருக்குப் பாராட்டு :** சமூக நீதிக்காக பிரதமர் பதவியைத் தூக்கி எறிந்து, பார்ப்பன உயர் ஜாதி எதிர்ப்புகளைப் புறந்தள்ளி, ஒன்றிய அரசுப் பதவிகளில் முதல்முறையாக இதர பிற்படுத்தப்பட்டோருக்கு 27% இட ஒதுக்கீட்டை வழங்கி இந்திய அரசியலில் மண்டல் அத்தியாயத்தை தொடங்கி வைத்தவரும், தமிழ்நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்கள் உள்ளத்தில் நீங்கா இடம்பெற்றவருமான வி.பி.சிங் அவர்களுக்கு சென்னையில் சிலை அமைக்கப்படும் என்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பை இந்த செயலவை பாராட்டி மகிழ்ந்து வரவேற்கிறது.

**1000 தெருமுனைக் கூட்டங்கள் :** தமிழ்நாட்டில் திராவிடத்திற்கும் சனாதானத்திற்கும் இடையிலான போராட்டம் கூர்மையடைந்து வருகிறது. சமூகத்தை வேத காலத்திற்கு இழுத்துச் செல்ல மோடியின் ஆட்சிக் காலமே சரியான தருணம் என்று கருதி சனாதனத்தை நியாயப்படுத்தி திராவிடத்தை கொச்சைப்படுத்தும் முயற்சிகள் தீவிரமடைந்து வருகின்றன. தமிழ்நாடு ஆளுநர் முதல் சங் பரிவாரங்களும், பார்ப்பனிய பாஜக மதவாத சக்திகளும் மக்களிடையே உண்மைக்கு மாறான பொய்யான வரலாறுகளையும், அறிவியலுக்கு எதிரான கருத்துகளையும் பரப்பி குழப்பி வருகிறார்கள். இதை முறியடிக்க சனாதனம் கடந்த பல

*(4ஆம் பக்கம்)*

## எழுச்சியுடன் நடந்த செயலவை

*சேலத்தில் திராவிடர் விடுதலைக் கழக செயலவை கூட்டம் மே 21 காலை 10:30 மணியளவில் குகை ஜிபி கூடத்தில் சேலம் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் கோவிந்தராஜ் கடவுள் ஆத்மா மறுப்புகளைக் கூறத் தொடங்கியது. மாநகரச் செயலாளர் ஆனந்தி வரவேற்புரையாற்ற பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் செயலவை நோக்கம் குறித்து அறிமுக உரை நிகழ்த்தினார். தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி தீர்மானங்களை முன்மொழிந்தார் . 30 தோழர்கள் மாநாட்டின் வெற்றி, எதிர்கால செயல் திட்டங்கள் குறித்து கருத்துகளை முன் வைத்தனர். மாநாட்டின் வரவு செலவு கணக்குகளையும் அவையின் முன் வைத்தனர், புரட்சிப் பெரியார் முழக்கம் வரவு செலவுக் கணக்குகளை பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் செயலவையில் முன் வைத்தார். 85 தோழர்கள் செயலவையில் பங்கேற்றனர். மதியம் அனைவருக்கும் மாட்டுக்கறி உணவு வழங்கப்பட்டது. காலை 10:30 மணிக்கு தொடங்கிய செயலவை உணவு இடைவேளையைத் தொடர்ந்து மாலை 6 மணி வரை நீடித்தது. இறுதியாக சேலம் மாநகரத் தலைவர் சரவணன் நன்றி கூறினார்.*

*தோழர்கள் அனைவரும் குழுவாக புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.*

தலையங்கம்

# தோழர்களே, தயாராவீர்!

வைக்கம் போராட்டத்திற்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் நிலையில் “வைக்கம் போர் முடியவில்லை” எனும் தலைப்பில் ஜாதித் தீண்டாமைக்கு எதிரான இயக்கத்தை முன்னெடுக்க திராவிடர் விடுதலைக் கழகம் முடிவு செய்து இருக்கிறது. தமிழ்நாட்டில் சாக்கடை மலகுழிகளை சுத்தம் செய்யும் ஆபத்தான இழிவு வேலைகளுக்கு மனிதர்களைப் பயன்படுத்தும் அவலம் தொடர்கிறது. நச்சுக் காற்றில் சிக்கி பல தலித் தோழர்கள் உயிரிழக்கிறார்கள். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்த பிரச்சனையில் கவனம் செலுத்தி செயல்பட முன் வந்திருப்பதை நாம் பாராட்டி வரவேற்கிறோம். மனித கழிவுகளை மனிதர்கள் எடுப்பது சட்டப்படி தடை செய்யப்பட்ட நிலையில் இந்த அவலம் தமிழகத்தில் அதிகம் நடப்பதை முதல்வர் நேர்மையோடு ஒப்புக்கொண்டு இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறார்.

முதல் கட்டமாக நகர பகுதிகளில் நவீன இயந்திரங்களை அடுத்த நான்கு மாத காலத்துக்குள் முழுமையாக செயல்பாட்டுக்குக் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார். இனிவரும் காலங்களில் மனிதர்கள் செய்யும் இந்த இழிவு வேலைகளை தடுக்க அரசு அலுவலர்கள் முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், தவறுவோர் தண்டிக்கப்படுவார்கள் என்றும் முதல்வர் எச்சரித்துள்ளார்.

தமிழ்நாட்டு கிராமங்களில் பல்வேறு வடிவங்களில் தீண்டாமை தலைவிரித்தாடுகிறது. பார்ப்பனியத்தின் கருத்தியலான இந்தத் தீண்டாமையைத் திணிக்கும் இடைநிலை ஜாதியினர் கட்சி மாறுபாடுகளை கடந்து கைகோர்த்து நிற்கிறார்கள். இது மறுக்க முடியாத உண்மை நிலை

ஜாதி எதிர்ப்பை தனது இலட்சியமாகக் கொண்டுள்ள பெரியார் இயக்கமான திராவிடர் விடுதலைக் கழகம் கடந்த காலங்களில் பெரியார் திராவிடர் கழகமாக செயல்பட்ட போது இந்தத் தீண்டாமைகளை எதிர்த்து களமிறங்கி போராடியது திராவிடர் விடுதலைக் கழகம் ஏனைய ஜாதி அமைப்புகளை போன்றது அல்ல. ஜாதி மறுப்பாளர்களைக் கொண்ட ஒரு இயக்கம் என்ற தனித்துவத்தோடு இந்த போராட்டத்தை முன்னெடுப்பது மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

தீண்டாமைக்கு உள்ளாக்கப்படும் பிரிவினர்களே இத்தகைய உரிமைப் போராட்டங்களை நடத்தும் போது ஜாதி ஆதிக்கவாதிகள் அதை ஜாதி மோதல் களமாக மாற்றி விடுகிறார்கள், பெரியார் இயக்கம் நடத்தும் போராட்டங்களை அப்படி திசை திருப்பி விட முடியாது.

இந்தக் கொள்கை உறுதியோடு தமிழ்நாட்டின் தீண்டாமையைத் திணிக்கும் கிராமங்கள், கடைகள் தீண்டாமை வடிவங்கள் குறித்த பட்டியலை தயாரிக்கும் பணிகளில் ஜூன் மாதம் முதல் தேதி தொடங்கி ஜூன் 30ஆம் தேதி வரை தோழர்கள் களத்தில் இறங்குகிறார்கள். உரிய நடவடிக்கைகளுக்கு அரசின் பார்வைக்கும் அரசு அமைப்புகளின் பார்வைக்கும் இவை கொண்டு செல்லப்படுவதோடு இறுதிக்கட்டமாக களமிறங்கி அறவழியில் போராடவும் திராவிடர் விடுதலைக் கழகம் தீர்மானித்துள்ளது.

பெரியார் இயக்கத்தை வன்மத்தோடு பார்க்கும் சிலர் அறிவு ஜீவிகளாகத் தங்களைக் கருதிக் கொண்டிருப்போர் தீண்டாமை ஒழிப்பில் தமிழ்நாட்டை விட உத்தரபிரதேசம் முன்னிலையில் இருக்கிறது என்று பேசி வருகிறார்கள்.

தேசிய குற்றப்பிரிவு ஆணையம் (என்சிஆர்பி) தரும் தகவல்படி தீண்டாமை கொடுமைகளில் இந்தியாவிலேயே முதல் இடத்தில் இருப்பது உத்தரப்பிரதேசம் தான் 2018இல் 11,924 வழக்குகளும் முறையே 2019இல் 11,829; 2020இல் 12,714; 2021இல் 13,146 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

யூனியன் பிரதேசங்களில் மணிப்பூர் முதல் இடத்தில் இருக்கிறது அந்தமான் தீவில் மட்டும் தான் 2018 இல் இருந்து எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை.

நாடாளுமன்றத்தில் பகுஜன் சமாஜ் கட்சி உறுப்பினர் கிரீஸ் சந்திரா எழுப்பிய கேள்விக்கு உள்துறை இணை அமைச்சர் அஜயகுமார் அளித்த பதில் இது (தகவல்: ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ மார்ச் 24 2023). உத்தரபிரதேசம் தீண்டாமை கொடுமைகளின் முதலிடத்திலும், பீஹார் 2ஆவது இடத்திலும், ராஜஸ்தான் 3ஆவது இடத்திலும், மத்திய பிரதேசம் 4ஆவது இடத்திலும், ஆந்திரா 5ஆவது இடத்திலும், தெலுங்கானா 6ஆவது இடத்திலும், கர்நாடகா 7ஆவது இடத்திலும், குஜராத் 8ஆவது இடத்திலும், தமிழ்நாடு 9ஆவது இடத்திலும் இருக்கிறது

தீண்டாமைக்கு கருத்தியலை வழங்கிக் கொண்டிருக்கும் ஜாதியையும் ஜாதியைக் காப்பாற்றும் பார்ப்பனியத்தையும் இணைத்து தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை நாம் முன்னெடுத்து வருகிறோம். பார்ப்பனியத்தோடு சமரசம் செய்து கொண்டு தீண்டாமைக்குக் காரணமே ஆதிக்க ஜாதியினரும் காவல்துறையும் அரசும் தான் என்று அம்பேத்கர் சிந்தனைக்கு மாறாக பிரச்சனையின் ஆழத்தை சுருக்கி திசை திருப்பும் முயற்சிகளும் நடந்துகொண்டு இருக்கின்றன.

பெரியார் எதிர்ப்பு காழ்ப்புணர்ச்சியோடு பேசிவரும் இத்தகைய குழப்பவாதிகளை புறந்தள்ளி இந்தப் பெரும் பணியை முன்னெடுக்க நாம் தயாராவோம்.

சேலம் மாநாட்டின் வெற்றி அதன் செயல் திட்டங்களை முன்னெடுப்பதிலேயே அடங்கி இருக்கிறது என்பதை உணர்ந்து கழகத் தோழர்கள் தீண்டாமைப் பட்டியல் தயாரிக்கும் பணிகளை துரிதமாக தொடங்கிடுவார்கள் எனும் உறுதியான நம்பிக்கை நமக்கு உண்டு. தோழர்களே, தயாராவீர்!

# ஹிட்லர் வழியில் பாஜக

பாரதிய ஜனதா கட்சி ஒரு வகுப்புவாத கட்சி என்பதற்கு சான்றாக ஏடுகளில் செய்தி வந்திருக்கிறது.

உத்தரகாண்ட் மாநிலம் அருவா மாவட்டத்தில் மவுரியா நகரசபைத் தலைவராக இருக்கும் யஷ்பால் பேனா, இவர் தனது மகள் ஒரு இஸ்லாமியரை காதலித்தார் என்பதை ஏற்றுக் கொண்டு இருவருக்கும் திருமணம் செய்வதற்கு இரு வீட்டாரும் சம்மதம் தெரிவித்து இம்மாதம் 28ஆம் தேதி திருமணம் நடக்க இருந்தது. குடும்ப நிகழ்ச்சியான திருமணத்திற்கு அரசியல் கட்சியான பா.ஜ.க. எதிர்ப்பு தெரிவித்தது.

உத்தரகாண்டில் இந்து அமைப்பினர் இந்தத் திருமணத்திற்கு எதிராக போராட்டம் நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து மக்கள் பிரதிநிதியாக தான் இருப்பதால் இந்தத் திருமணம் நடைபெறுவதை விரும்பவில்லை என்று கூறி தனது மகளின் திருமணத்தை ரத்து செய்து இருக்கிறார்.

பா.ஜ.க.வினர் அசைவம் சாப்பிடக் கூடாது; பா.ஜ.க.வினர் பிராமணனை வணங்க வேண்டும் என்றுகூட போராட்டம் நடத்தினாலும் வியப்பு இல்லை.

திருமணம் என்பது தனிமனித உரிமையைச் சார்ந்தது. இருவரும் காதலித்தார்கள்; இருவரும் திருமணம் செய்ய விரும்பினார்கள்; பெற்றோர்களும் அதை ஜனநாயகத்தோடு ஏற்றுக் கொண்டார்கள்.

ஆனால் தனி மனித உரிமையில் மதவெறுப்பை மதவாதத்தை திணித்து இந்தத் திருமணம் நடக்கக் கூடாது என்று பாஜகவினரே எதிர்ப்பு தெரிவிப்பது; பாஜகவை எதிர்த்து இந்து அமைப்புகள் அதற்கு போராட்டம் நடத்துவதும் இந்த அமைப்புகள் எவ்வளவு கொடூரமான பாசிஸ்டுகள் என்பதற்கு சான்றாகும்.

பாரதிய ஜனதா கட்சியில் உயர் மட்டத்தில் பல தலைவர்கள் இஸ்லாமியர்களை திருமணம் செய்து இருக்கிறார்கள். குறிப்பாக சொல்லப் போனால் வெளியுறவுத் துறை அமைச்சராக இருக்கிற ஜெய்சங்கரின் மனைவி குயாக்கோ ஜப்பான் நாட்டைச் சார்ந்தவர். ஜெய்சங்கருக்கு இது இரண்டாவது திருமணம்.


எதற்கெடுத்தாலும் இந்துத்துவம் பேசிக் கொண்டிருக்கும் சுப்பிரமணிய சாமியின் மகள் சுகாசினி நதிம் ஹைதர் என்ற இஸ்லாமியரைத் தான் திருமணம் செய்து கொண்டிருக்கிறார்.

இப்படி மேல்மட்ட பிரமுகர்கள் தங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு இஸ்லாமியர்களைத் திருமணம் செய்து கொண்டிருக்கிற பல நிகழ்ச்சிகள் உண்டு. பாரதிய ஜனதா கட்சித் தொண்டர்கள் ஹிட்லரின், முசோலினியின் பாசிச, நாசிச இனவெறிக் கொள்கைகளில் ஊறிப் போய் நிற்கிறார்கள் என்பதற்கு உத்தரகாண்ட் சம்பவம் ஒரு சரியான சான்றாகும்.

# சனாதனத்தின் கொடூர வரலாறு (2)

# கோயில் நுழைவு உரிமை சந்தித்தத் தடைகள்

*பிரிட்டிஷ் ஆட்சி காலம் தொடங்கி சுதந்திர இந்தியாவில் சனாதனம் பேசி பார்ப்பனியம் எந்த ஒரு சிறு சமூக மாற்றத்தையும் தடுத்து வந்ததோடு நீதி மன்றங்களிலும் வழக்குத் தொடர்ந்தது. ஆண்டு வாரியாக சனாதனக் கொடுமைகள் அது தொடர்பான வழக்குகள் குறித்து ஒரு சுருக்கமான ஆண்டுகள் வழியான தொகுப்பு. மனோஜ் மிட்டல் எழுதி அண்மையில் வெளிவந்த மிகச்சிறந்த நூலான ஜாதியப் பெருமை (Caste Pride) நூலிலிருந்து: (சென்ற இதழ்த் தொடர்ச்சி)*




**1926** : மராட்டியப் பகுதிகளில் பிராமண அர்ச்சகர்கள் பரம்பரை அடிப்படையில் ஒவ்வொரு கிராமத்துக்கும் தங்களை அதிகாரபூர்வ அர்ச்சகர்களாக நியமித்துக் கொண்டனர். எந்த வைதீக சடங்குகளும் நடத்தும் உரிமை தங்களுக்கு மட்டுமே உண்டு என்று உரிமை கோரினார்கள். வெளியில் இருந்து ஒரு அர்ச்சகர் சடங்கு நடத்தி கட்டணம் வாங்கியதை எதிர்த்து நீதிமன்றம் சென்று வழக்கு தொடர்ந்தனர். பம்பாய் உயர் நீதிமன்றம் புரோகித பார்ப்பனர்கள் பரம்பரை உரிமையை உறுதி செய்து தீர்ப்பளித்து விட்டது. வைதீக சடங்குகள் இல்லாமல் திருமணங்கள் நடத்தப்பட்டால் அதற்கும் உள்ளூர் புரோகிதர்களுக்கு உரிய கட்டணங்களை கட்டாயம் செலுத்தியாக வேண்டும் என்ற நிலை நீடித்தது. 1926 இல் பம்பாய் மாகாண சட்டமன்றம் இதற்காகவே ஒரு தனி சட்டம் இயற்றியது. உள்ளூர் அர்ச்சகர் தங்களுக்கு மட்டுமே ஏகபோக உரிமை உண்டு என்று கோர முடியாது, வைதீக முறை இல்லாமல் நடத்தப்படும் திருமணங்களுக்கும் புரோகித கட்டணம் செலுத்தியாக வேண்டும் என்பதும் தேவையில்லை என்று அந்த சட்டம் கூறியது.

**1929**ஆம் ஆண்டு பிரிவி கவுன்சில் கோயில் சம்பிரதாயங்களை மீறக்கூடாது என்ற அடிப்படையில் தீண்டப்படாத மக்களுக்கு கோயிலில் நுழைய அனுமதி இல்லை என்று தீண்டாமையை நியாயப்படுத்தி தீர்ப்பு வழங்கியது. பம்பாய் மாகாண சட்ட சபைக்கு நியமன உறுப்பினராக நியமிக்கப்பட்ட அம்பேத்கர் இந்த தடையை நீக்கி தீண்டப்படாத மக்களை கோவிலுக்குள் அனுமதிக்க கோரும் மசோதாவை பம்பாய் மாகாண சட்டமன்றத்தில் அறிமுகம் செய்தார் .

**1930** : சுயமரியாதை இயக்கத்தில் இருந்தவரும், பெரியாரோடு நெருக்கமாக உறவில் இருந்தவருமான பொருளாதார நிபுணர் ஆர்.கே.சண்முகம் செட்டியார் டெல்லி தேசிய சட்டசபையில் உறுப்பினராக இருந்தார். பம்பாய் மாகாண சட்டமன்றத்தில் அம்பேத்கர் அறிமுகம் செய்த மசோதாவை டெல்லி தேசிய சட்டமன்றத்தில் ஆர் .கே. சண்முகம் செட்டியார் அறிமுகம் செய்தார். சுதந்திர இந்தியாவின் முதல் நிதி அமைச்சராக இருந்தவர் ஆர்.கே.சண்முகம் செட்டியார் என்பது குறிப்பிடத்தக்கது.

**1932** : தீண்டப்படாத மக்களுக்கு தனித் தொகுதி முறையை காந்தியும் ஜாதிய இந்துக்களும் உண்ணாவிரதம் இருந்து மிரட்டல் நாடகம் நடத்தி அதை தோற்கடித்தார்கள். அதற்கு மாற்றாக பூனா ஒப்பந்தம் ஒன்று உருவானது. அம்பேத்கர் பெற்றுதந்த தனித் தொகுதி உரிமை இதன் மூலம் முறியடிக்கப்பட்டது. இதற்காக தீண்டபடாத மக்களை சமாதானப்படுத்தும் நோக்கத்தோடு பூனா ஒப்பந்தம் உருவான அடுத்த நாளே தீண்டப்படாத மக்கள் பொது இடங்களை பயன்படுத்தும் உரிமையை ஆதரித்து அதற்கான மசோதா ஒன்றை காந்தியே கைப்பட தயாரித்தார். கோயில் நுழைவு உரிமை மக்களுக்கான அடிப்படை உரிமை என்ற வாசகத்தை மட்டும் காந்தி தவிர்த்து விட்டார் .

**1933** : இந்தியாவில் உருவாக்கப்பட்ட மத்திய மாகாண சபை என்பது இன்றைய மத்திய பிரதேசம், சட்டீஸ்கர், மகாராஷ்டிரா மாநிலங்களை உள்ளடக்கியதாகும். இதன் தலைநகரமாக நாக்பூர் இருந்தது. இந்த மத்திய மாகாண சபையில் தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்த ஜி.ஆர். கவாய் தனிநபர் மசோதா ஒன்றை கொண்டுவந்தார். மக்கள் வீதி, குளம்,கோயில் உள்ளிட்ட அனைத்து பொது இடங்களையும் பயன்படுத்தும் உரிமையை அது வலியுறுத்தியது. இந்த மசோதாவை மத்திய மாகாண சபை ஏற்றுக் கொண்டது. பிரிட்டிஷ் இந்தியாவில் இந்த உரிமைகளை முதலில் வழங்கியது மத்திய மாகாணம் தான்.

**1933** : டெல்லி தேசிய சட்டசபையில் சி.எஸ்.ரங்கா ஐயர் என்ற உறுப்பினர் காந்தி தயாரித்த கோயில் நுழைவு மசோதாவை அறிமுகப்படுத்தினார். ஒவ்வொரு கோயிலையும் தனித்தனியாக ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்றும் அந்தந்த உள்ளூர் பகுதியில் வாழும் பெரும்பான்மை மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தி தீண்டப்படாதார் கோயில் நுழைவுக்கான அனுமதி கேட்ட பிறகுதான் கோயிலுக்குள் அவர்களை அனுமதிக்க வேண்டும் என்றும் காந்தியின் மசோதா கூறியது

**1936** : திருவாங்கூர் சமஸ்தான அரசர் சித்திரை திருநாள் புரட்சிகரமான பிரகடனம் ஒன்றை வெளியிட்டார் . தனது சமஸ்தானத்திற்குள் எந்த ஒரு இந்துவின் மீதும் பிறப்பு மதம் அடிப்படையில் கட்டுப்பாடுகளை விதிக்கும் உரிமை எவருக்கும் இல்லை என்று இந்த பிரகடனம் அறிவித்தது. பிரிட்டிஷ் இந்தியாவில் இப்படி ஒரு பிரகடனத்தை முதலில் அறிவித்தது திருவாங்கூர் சமஸ்தானம் தான்

**1937** : இந்து மதத்திற்குள்ளேயே வெவ்வேறு ஜாதியினர் திருமணம் செய்து கொள்ளும் உரிமை கிடைத்தது 1937 ஆம் ஆண்டு தான். என்.பி. காரே என்ற உறுப்பினர் தாக்கல் செய்த மசோதா இந்தியா முழுமைக்கும் சட்டமாக்கப்பட்டது, அதற்கு முன்பு ஆரிய சமாஜ் அமைப்பில் இருந்தவர்களுக்கு மட்டுமே இந்த உரிமை இருந்தது.

**1938** : பம்பாய் மாகாண சட்டசபை காந்தியார் மசோதாவை நிராகரித்தது. கோயில் அறங்காவலர்கள் ஒப்புதல் தந்தால் தீண்டப்படாதவருக்கு கோயில் நுழைவு உரிமை வழங்கலாம் என்ற சட்டத்தை நிறைவேற்றியது.

**1939** : பம்பாய் மாகாணத்தில் நடந்த காங்கிரஸ் கட்சி ஆட்சி மதத்தொடர்பு இல்லாத இடங்களை தீண்டப்படாத மக்கள் பயன்படுத்தலாம் என்று ஒரு சட்டம் கொண்டு வர முயன்ற போது அம்பேத்கரின் அரசியல் கட்சி அந்த சட்டத்தை நிறைவேற்ற விடாமல் தடுத்தது. தீண்டாமையை காவல்துறை தண்டனைக்குரிய குற்றமாக கருதி தண்டிக்க வேண்டும் என்ற சட்டத்தை கொண்டு வராமல் இப்படி ஒரு சட்டம் கொண்டு வருவது எந்தப் பயனையும் தராது என்பது அம்பேத்கரின் கருத்து.

**1946** : ஒரே கோத்திரத்துக்குள் நடக்கும் திருமணங்கள் செல்லாது என்ற இந்து சட்டப் பிரிவை ஒழித்து அவை செல்லும் என்ற சட்டம் இந்த ஆண்டில் தான் கொண்டுவரப்பட்டது. இந்த மசோதாவை டெல்லி மத்திய சட்ட சபையில் கொண்டு வந்தவர் கோபால் ராவ் தேஷ்முக்.

**1947** : தீண்டபடாதார் கோயில் நுழைவுக்கு உள்ளூர் மக்கள் ஆதரவு வேண்டும் என்று அமலில் இருந்த சட்டத்தை நீக்கியது சென்னை மாகாண சட்டசபை. தீண்டப்படாதவர்களை தடுப்பவர்கள் மீது அபராதம் விதிக்கும் சட்டத்தை கொண்டு வந்தது .

**1948** : அரசியல் நிர்ணய சபை தீண்டாமை ஒழிக்கப்படுகிறது என்ற சட்டப்பிரிவை மகாத்மா காந்திக்கு ஜே என்ற முழக்கத்துடன் சட்டப் புத்தகத்தில் சேர்த்தது. அரசியல் நிர்ணயசபையில் இடம் பெற்றிருந்த தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்த பெண் உறுப்பினர் தட்சாயினி வேலாயுதம் என்ற ஒருவர் மட்டுமே இந்த சட்டத்தை எதிர்த்து தீண்டாமையை ஆதரித்தார்.

**1948** : பூரி ஜெகநாதன் கோயில் அறங்காவலர்கள் அனைத்து இந்துக்களையும் கோவிலுக்குள் அனுமதிக்க விரும்பாத நிலையில் ஒரிசா அரசை கட்டாயப்படுத்தி இந்துக்களில் சில பிரிவினருக்கு மட்டுமே கோயில் நுழைவு உரிமை உண்டு என்று சட்டம் இயற்றச் செய்தனர் .

**1949** : நாடாளுமன்றத்தில் தாக்கூர் தாஸ் பார்கவா கொண்டுவந்த மசோதா ஜாதி மறுப்பு திருமணங்கள் செல்லும் என்பதை உறுதிப்படுத்தியது.

**1950** : தீண்டாமை குற்றத்தை செய்தவர்கள் தண்டிக்கப்படுவர் என்ற சட்டம் இந்தியா முழுவதும் அமுலுக்கு வந்தது .

**1953** : சுயமரியாதை திருமணம் செல்லாது என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள் சத்ய நாராயணராவ் மற்றும் பூண்டி ராஜகோபாலன் இரண்டு கருத்துக்களை முன் வைத்தனர், பெண்களை தானமாக வழங்குவது தான் இந்து திருமணத்தின் அடிப்படை, அதேபோல் தாலி கட்டும்போது வேதம் ஓதி அக்னி வளர்க்க வேண்டும் என்பதும் கட்டாயம், இவை இரண்டும் சுயமரியாதை திருமணத்தில் இடம் பெறாததால் திருமணம் செல்லாது என்று தீர்ப்பு அளித்தனர்.

**தமிழில் : இராசேந்திரன்**

(நிறைவு)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# திலீபன் மீது கொலை வெறித் தாக்குதல் வேலூரில் கழகம் கண்டன ஆர்ப்பாட்டம்

*திலீபன் மீது காவலர்கள் முன்னிலையில் கொலை வெறித் தாக்குதல் நடத்திய ராமமூர்த்தி தலைமையிலான வன்முறை கும்பலை கைது செய்! திலீபன் மீது போடப்பட்ட பொய் வழக்கை திரும்ப பெறு! எனும் கோரிக்கைகளுடன் கண்டன ஆர்ப்பாட்டம் திராவிடர் விடுதலைக் கழகம் மற்றும் தோழமை அமைப்புகளின் சார்பில் ராணிப்பேட்டை முத்து கடை பேருந்து நிலையம் முன்பு 08.05.2023 திங்கள் காலை 10.30 மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

ஆர்ப்பாட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட தலைவர் பெரப்பேரி திலீபன், தன் கிராமத்தில் சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டவர்களுக்கு எதிராக ஊர் கட்டுப்பாடு போட்டதை எதிர்த்து போராடியதற்காகவும், தன் கிராமத்தில் பொது வழிப் பாதையை ஆக்கிரமித்து வீடு கட்டியதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்ற வரை சென்று சட்டப் போராட்டம் நடத்தி ஆக்கிரமிப்பு அகற்றுவதற்கான ஆணையைப் பெற்று வந்தார்.

இந்நிலையில் அதனை பொறுத்துக் கொள்ள முடியாத கிராமத்தைச் சார்ந்த ராமமூர்த்தி தலைமையிலான கட்டப்பஞ்சாயத்து கும்பல் இரண்டு முறை கொலை முயற்சி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் திலீபன் அவர்களுடைய இல்லம் சேதப் படுத்தப்பட்டது மற்றும் அவருடைய இருசக்கர வாகனம் முற்றிலும் சேதப்படுத்தப்பட்டது. இத்தாக்குதலில் திலீபன் மற்றும் அவர் குடும்பத்தினர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

இச்சம்பவங்களை கண்டித்தும் உண்மையான குற்றவாளிகளை கைது செய்யக் கோரியும் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஒருங்கிணைந்த வேலூர் திவிக மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் சிவா தலைமை தாங்கினார்.

ஆர்ப்பாட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில துணைப் பொதுச் செயலாளர் வன்னி அரசு சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் திருமூர்த்தி, கழக தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாநில அமைப்பு செயலாளர் நீல சந்திரகுமார், விசிக ராணிப்பேட்டை மாவட்ட செயலாளர் குண்டா சார்லஸ் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

மேலும் மக்கள் தமிழகம் கட்சி,தீண்டாமை ஒழிப்பு முன்னணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஜனநாயக இளைஞர் முன்னணி, மக்கள் ஜனநாயக இளைஞர் கழகம், பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகள் கண்டன உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்திற்கு சேலத்தில் இருந்து காவை ஈஸ்வரன் தலைமையிலும், விழுப்புரம் இளையரசன் தலைமையிலும், சென்னை உமாபதி தலைமையிலும் கழகத் தோழர்கள் வந்திருந்து பங்கேற்றனர்.

மேலும் இந்த ஆர்ப்பாட்டத்தில் வாணியம்பாடி, ஆம்பூர் பேரணாம்பட்டு, ஆற்காடு, குடியேற்றம் வேலூர், நெமிலி ஆகிய பகுதியிலிருந்து பெருந்திரளாக கழகத் தோழர்கள் மற்றும் பரப்பேரி கிராம பொதுமக்கள் உள்ளிட்ட சுமார் 400 பேர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் பெரப்பேரி திலீபன் மீது பாதுகாப்பிலிருந்து காவலர்கள் முன்பே கொலை முயற்சி தாக்குதல் நடத்தியும் அவர்களின் உடைமைகளை சேதப்படுத்திய ராமமூர்த்தி தலைமையிலான வன்முறை கும்பலைக் குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்ய கோரியும், திலீபன் மீது போடப்பட்ட பொய் வழக்கை திரும்ப பெறக் கோரியும் முழக்கங்கள் எழுப்பப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ராணிப்பேட்டை காவல்துறை கண்காணிப்பாளரை நேரில் சந்தித்து ஆர்ப்பாட்டக் கோரிக்கைகளை வலியுறுத்தி ராமமூர்த்தி தலைமையிலான வன்முறைக் கும்பலை உடனடியாக கைது செய்ய கோரிக்கை வைக்கப்பட்டது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

நூற்றாண்டுகளாக சமூகத்தை பார்ப்பனியமயமாக்கிய ஆபத்துகளையும், திராவிடம் இதை எதிர்த்து விளிம்பு நிலை மக்களின் சுயமரியாதைக்கும், வாழ்வுரிமைக்கும் நடத்திய போராட்டங்களையும் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டிய தேவை உருவாக்கியிருக்கிறது. இதை கருத்தில் கொண்டு எது "திராவிடம்! எது சனாதனம்! விளக்க கூட்டங்கள்" என்ற தலைப்பில் தமிழ்நாடு முழுவதும் 1000 தெருமுனைக் கூட்டங்களை ஜூலை 1 முதல் நடத்துவது என்று இந்த செயலவை தீர்மானிக்கிறது.

**தீண்டாமை கிராமங்கள் ; பட்டியல் தயாரிப்பு:** ஜாதித் தீண்டாமைக்கு எதிரான போராட்டங்கள், அவை முடிவுக்கு வரும்வரை நீண்ட காலம் சமுதாயத்தில் தொடர்ந்து நடத்தப்பட்டாக வேண்டும். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக சமூகக் கட்டமைப்பாக இறுகிப் போய் கிடக்கும் இந்த அமைப்பை தமிழ்நாடு, ஏனைய மாநிலங்களை விட ஓரளவு அசைய வைத்திருக்கிறது என்றாலும் இப்போதும் பல்வேறு வடிவங்களில் இந்த பாகுபாடு தொடர்ந்து கொண்டு இருக்கிறது. அந்த கண்ணோட்டத்தில் கடந்த ஏப்ரல் 29, 30 சேலத்தில் நாம் நடத்திய மாநில மாநாட்டில் "வைக்கம் போர் முடியவில்லை" எனும் தலைப்பில் ஜாதித் தீண்டாமை எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுப்பதாக முடிவு எடுத்தோம்.

அதற்கான செயல்திட்டங்களாக முதல் கட்டமாக ஜூன் 1–இல் தொடங்கி ஜூன் 30ஆம் தேதி முடிய, பட்டியல் இன மக்கள் தெருவில் நடக்க அனுமதி மறுத்தல், பொதுக் கோயில்களில் வழிபட உரிமை மறுத்தல், செருப்பு அணிந்து வீதிகளில் நடமாட தடை, தேநீர் கடைகளில் இரட்டைக் குவளை முறை உள்ளிட்ட பல்வேறு தீண்டாமை வடிவங்களை பின்பற்றும் கடைகள், ஊர்கள், இடங்களைப் பற்றியப் பட்டியலை தயாரிக்க வேண்டும். அதன் விவரங்களை தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இரண்டாவது கட்டமாக அந்தப் பட்டியலை அரசு அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர், ஆதிதிராவிடர் நலத்துறை, தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் நல ஆணையம் மற்றும் மனித உரிமைகள் ஆணையம் ஆகிய அமைப்புகளிடம் ஜூலை 10ஆம் தேதிக்குள் நேரில் மனு அளித்து இந்த பாகுபாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்படும்.

மூன்றாவது கட்டமாக ஆகஸ்ட் 28இல் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டங்களை தமிழகம் முழுவதும் நடத்த வேண்டும் என்று இந்த செயலவை முடிவு செய்கிறது.

இதைத் தொடர்ந்து அடுத்தடுத்து இதற்கான இயக்கங்களை தீவிரமாக முன்னெடுக்கவும் இந்த செயலவை தீர்மானிக்கிறது.

## "புரட்சிப் பெரியார் முழக்கம்" தோழர்களுக்கு வேண்டுகோள்

*"புரட்சிப் பெரியார் முழக்கம்" பொறுப்பாளராக கழகத் தோழர் அன்னூர் விஷ்ணு செயல்பட்டு வருகிறார். பெரியார் முழக்கம் தொடர்பாக தோழர்கள் கீழ்க்கண்ட அலைபேசி எண்ணுக்கு அவரைத் தொடர்புக் கொள்ளவும்.*

*அலைபேசி எண் : 8973341377*

*விடுதலை இராசேந்திரன்*
*ஆசிரியர், புரட்சிப் பெரியார் முழக்கம்*

## சேலம் மாநில மாநாட்டுக்கு நிதி பங்களிப்பு வழங்கிய மாவட்டங்கள்

| | |
|---|---|
| ஈரோடு : ரூ.1,00,000 | கோவை : ரூ. 40,000 |
| கோபி : ரூ.1,00,000 | தஞ்சை மற்றும் திருச்சி : ரூ.50,000 |
| நாமக்கல் : ரூ.1,00,000 | மதுரை : ரூ. 25,000 |
| திருப்பூர் : ரூ.50,000 | மயிலாடுதுறை : ரூ. 25,000 |
| தர்மபுரி : ரூ.50,000 | |

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 26th May 2023

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN